VANA VANI MATRICULATION HIGHER SECONDARY SCHOOL
IITM CAMPUS, CHENNAI-36.
(Managed by IIT Madras Educational Trust)

योगः कर्मसु कौशलम्

International Dimension in Schools 2019–22

**14th November 2021**

# குழந்தைகள் தின விழா அறிக்கை – 2021

14/11/21 அன்று நம் பள்ளியில் குழந்தைகள் தின விழா நடைபெற்றது. அவ்விழாவிற்கு "ஹாஹோ சிரிப்பானந்தா" திரு.சம்பத் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கி நம் பள்ளியின் முதல்வர் அவர்கள் வரவேற்றார். வரவேற்புரையை பள்ளியின் தமிழ் ஆசிரியர் திரு.பா.சசிகுமார் அவர்கள் ஏற்றுக்கொண்டார். நிகழ்ச்சியின் தொடக்கமாக இறைவாழ்த்தும், அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றது. இப்பாடலை நம் பள்ளியின் இலக்கிய மன்ற மாணவத் தலைவர்கள் பாடி சிறப்புச் செய்தனர். குழந்தைகள் தின விழா நிகழ்ச்சிக்கு நம் பள்ளியின் மாணவத் தலைவர்களும், ஐ.ஐ.டி. வளாகத்திற்குள் நம் பள்ளியில் படிக்கும் மாணவர்களும் வருகை புரிந்திருந்தனர். மொத்தமாக 40 மாணவர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் "ஹாஹோ சிரிப்பானந்தா" திரு.சம்பத் அவர்கள் தம் நகைச்சுவையின் மூலம் யோகா பயிற்சியை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். மாணவர்கள் சிறந்த முறையில் அதனைக் கற்றுக் கொண்டனர். நிகழ்ச்சிக்கு உறுதுணையாக உடற்கல்வி ஆசிரியர்களும் இருந்தனர். நிகழ்ச்சி காலை 10 மணி அளவில் தொடங்கி 11 மணி வரை நடைபெற்றது. இறுதியாக நன்றியுரையை பன்னிரண்டாம் வகுப்பு மாணவி சந்தியா கூறினார் இறுதியாக நாட்டுப் பண்ணுடன் முடிக்கப்பட்டது.









